# வனக்குறவர் சமூகத்தின் சடங்குசார் ஆற்றுகைகள்: தொட்டுணராப் பண்பாட்டு மரபுரிமைகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு

திரு.சுந்தரலிங்கம் சந்திரகுமார்,
*முதுநிலை விரிவுரையாளர்,*
*கிழக்குப்பல்கலைக்கழம்,*
*வந்தாறுமூலை, இலங்கை.*

***ஆய்வு அறிமுகம் (Abstract)***

*பூர்வீகக்குடிகளின் வாழ்வியலில் தனித்துவமான பண்பாட்டு மரபுரிமைகள் பல்வகைமை வித்தியாசங்களுடன் பயில்வில் உள்ளன. நாட்டாரியத்துறையில் இதன் ஆராய்ச்சியும் புரிதலும் செயற்படுத்தப்பட்டாலும், ஏனைய துறைகளில் முன்னிலைப்படுத்தப்படுவது குறைவு. தொட்டுணராப் பண்பாட்டு மரபுரிமைகள்(Intangible Cultural Heritage) குறவர் சமூகத்தின் சடங்குகள், ஆற்றுகைகள், வழக்காறுகள், கொண்டாட்டங்கள் ஆகியவைகளில் அதிகம் வெளிப்படுத்தப்படுகின்றன. இப்பழங்குடிகளின் மரபுரிமைகள் இன்றைய உலகமயமாக்கல் சூழலினாலும்,சமஸ்கிருதமயமாக்கலினாலும்,இனவாத ஆதிக்கத்தினாலும், திறந்த பொருளாதார உருவாக்கத்தினாலும், காலனியத்தின் நாகரிகப்படுத்தல் எனும் மாயையினாலும், வளர்ச்சி, முன்னேற்றம், இலாபம் எனும் இயந்திரத்தன்மையினாலும் பல வழிகளில் அவர்களது இயற்கையுடன் கூடிய வாழ்வியல் சிதைக்கப்பட்டுசவால்களுக்கு உட்படுத்தப்படுகின்றமை அறிதலுக்குரியது. இவ்வாறான பண்பாட்டு மேலான்மையால் வித்தியாசங்கள் அழிக்கப்பட்டு பொதுத்தன்மை வலுப்பெற்றுள்ளது. இதனால், பொதுப்புத்தியில் தொட்டுணர்பவையே (Tangible) கண்ணுக்குப் புலப்படுகின்றது. கண்ணுக்குப் புலனாவதையே(Intangible)பாதுகாக்கவேண்டும் எனும் செயற்பாட்டில் ஈடுபடும் நிலையும் உள்ளது. கிழக்கிலங்கையில் போரும், இயற்கை அழிவுகளும் ஏற்படுத்திய இடப்பெயர்வினால் வனக்குறவர்களின் கண்ணுக்குப்புலனாகாமரபுரிமைகள் இயல்பாகவே ஆபத்து நிலையை அடைகின்றன. ஆனால், சில பிரதேசங்களில் இவர்களது வாழ்வியல், சடங்கு, கொண்டாட்டம், சட்டம், ஒழுங்கு, தொழில், கலை வெளிப்பாடு என்பவற்றில் வித்தியாசங்களுடன் புழக்கத்தில் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கன.*

*இந்தியாவின் ஆந்திரப் பிரதேசத்தில் இருந்து பல தேவைகளுக்காக வரவழைக்கப்பட்டு வனத்தில் வாழ்ந்த வனக்குறவர் சமூகம் பூர்வீகக் குடிகளாகக் கருதப்படுகின்றனர். இவர்கள் தமக்கு வசதியான இடங்களிலும், சிங்கள, தமிழ், முஸ்லீம் ஆகிய இனங்களுடன் இணைந்தும் வாழ்ந்தாலும், இவர்களின் வாழ்வியலில் வெளிப்படும் சடங்காற்றுகைகளிலும் பாரம்பரியத் தொழில் முறைகளிலும் தொட்டுணராப் பண்பாட்டு மரபுரிமைகள் பலவுண்டு. இது பெரும்பான்மை மதம், மொழி, கல்விமுறைகளால் தாக்கப்பட்டாலும் அம்மக்களின் உணர்வுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்றது. இவ்வாய்வில் அம்பாறை மாவட்டத்தில் ஸ்ரீவள்ளிபுரக் கிராமத்தில் வாழும் வனக்குறவர் சமுதாயத்தின் சடங்குசார் ஆற்றுகைகளிலும் தொழில் முறைகளிலும் வெளிப்படும் தொட்டுணராப் பண்பாட்டு மரபுரிமைகள் எவை என ஆராயப்படுகின்றன. பாரம்பரிய வாழ்வியல் வெளிப்பாடுகளை வலுப்படுத்தும்போதே தொட்டுணராப் பண்பாடு அறிவு முன்னிலை பெற்று, இவர்கள் ஒடுக்கப்பட்டவர்கள், உரிமையிழந்தவர்கள் என்பதனை மாற்ற முடியும்.*

**திறவுச் சொற்கள் (key Words)** : *தொட்டுணராப் பண்பாடு, வனக்குறவர்கள், மரபுரிமைகள், சடங்காற்றுகை.*

முன்னுரை

வனக்குறவர் சமூகத்தின் வாழ்வியல் வெளிப்பாட்டில் வித்தியாசமான பண்பாட்டுக் கூறுகள் கூட்டாகவும் தனித்தனியாகவும் பயிலப்படுகின்றது. சமகாலத்தில்,இவர்கள் குறைந்த எண்ணிக்கையினராகவே இலங்கையில் வாழ்கின்றனர். இன்றைய உலகமயமாக்கல் செயற்பாட்டின் ஆதிக்கத்தாலும், இனவாதத்தின் மேலாதிக்கத்தாலும், மத மாற்றத்தின் பரவலாக்கத்தாலும் இவ்வகைச் சமூகங்கள் அழிக்கப்பட்டு மாற்றமடைகின்றன. ஆனால், இவ்வனக்குறவர் சமூகத்தின் பாரம்பரியச் சடங்கு, தொழில் முறைகளில் அவர்கள் சார்ந்த அறிவு திறன், நிபுணத்துவங்கள், உள ஆற்றுப்படுத்தல் நுட்பங்கள்என்பன பல வழிகளில் கையாளப்படுகின்றன. அவற்றில், கண்ணுக்குப் புலணாகக்கூடிய மரபுரிமங்களே ஆய்வாளர்களாலும், ஏனையோர்களாலும் முன்னிலை வகிப்பது அவதானத்திற்குரியது. வனக்குறவர்களின் தொட்டுணராப் பண்பாட்டு மரபுரிமங்கள் அவர்களதுதொழிலிலும், சடங்காற்றுகையிலும் வலுவாக உள்ளது. நவகாலனித்தின் பண்பாட்டுச் சிதைப்பில் இவ்வகைச்சார்ந்த சமூகங்களின் பண்பாட்டுக் கூறுகள் சிதைந்து விடாது வலுப்படுத்துவதும், அதனைப் பரவலாக்குவதும் காலத்தின் தேவையாகும். இந்நிலையில்,இச்சமூகத்தின் தொட்டுணராப் பண்பாட்டுப் பாரம்பரியங்களில் குறித்த விடயங்கள் ஆராயப்பட்டு வெளிப்படுத்தப்படுகின்றன.

***கண்டுபிடிப்பும் உரையாடலும்***

நாடோடி வாழ்க்கையுடைய வனக்குறவர்கள் இலங்கையில் மிகச் சிறுபான்மையாக வனம்சார்ந்த பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர்.இவர்கள் எண்ணிக்கையில் குறைந்த தொகையினராகவே உள்ளனர். இலங்கையில் அனுராதபுர ஆட்சிக்காலத்தில் பணியாட்கள், படையணிகள் எனக் காலத்திற்குக்காலம் வந்தடைந்தவர்களில் ஒரு பகுதியினரே இந்தத் ‘தெலுங்குமொழி’ பேசுபவர்களாவர். இவர்கள் ‘வனக்குறவர்’,‘குறிசொல்லும் குறவர்’,‘தெலுங்கர்’ என்றும் வனத்தில் வாழ்ந்ததனால் ‘வனக்குறவர்’ என்றும் அழைக்கப்படுகின்றனர்.“ஆந்திராவில் நக்கலா, நக்கலவாண்டுலு, பிள்ளைகுத்து” (கரசூர் பத்மபாரதி, 2004, 20) எனும் பெயருடன் தனித்துவமான பண்பாடு, வழிபாடு, தொழில் என்பவற்றுடன் வாழ்கின்றமையும் புரிதலுக்குரியது.

இலங்கையில் ஆரியர்களின் குடியேற்றத்தாலும் பௌத்த மதத்தின் வருகையாலும் குறவர்களின் சிதறல் ஏற்பட்டது. இதனால் தேவநம்பியதீசன் சிங்கள மதத்தை தழுவினான். வேட்டையாடுதல் பௌத்த மதத்தின் கொள்கைப்படி எதிர்க்கப்பட்டதால், இவர்கள் வனத்தில் ஒதுங்கி வாழ்ந்தனர். காலனிய ஆக்கிரமிப்பால் மீண்டும் சிதறி வெவ்வேறு காடுகளில் வசித்து பின்அம்பாரை மாவட்டத்தில் ஸ்ரீவள்ளிபுரம், அறுகம்பை, இறக்காமம், உகணை, ஆலையடிவேம்பு, கண்ணகி கிராமம் ஆகிய கிராமங்களில் நிலையாக வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இயற்கை அனர்த்தம் காரணமாக அங்கிருந்து மட்டக்களப்பிற்கு நகர்ந்து படுவான்கரையிலும் வசிக்கின்றனர்.நாடோடிகளாக வாழும் இயல்புகொண்ட இச்சமூகம் தமது வாழ்வாதாரம், தொழில், பாதுகாப்பு கிடைக்கும் இடங்களில் குடியமர்வதையும் பின் குடிபெயர்வதையும் அறியலாம்.

ஆனால்,இவர்கள் சமகாலத்தில் ஓரிடத்தில் நிலைத்து வாழ்வதும், தம்மைச்சுற்றி வாழும் பெரும்பான்மைச் சமூகத்துடன் இணைந்து வேறு தொழில்களைச் செய்வதும், இளைஞர், யுவதிகள் கல்வி கற்று பல்கலைக்கழகம் சென்று அரச உத்தியோகம் பார்ப்பதுமாக மாற்றமடைந்துள்ளர். இருப்பினும்,ஒருபகுதியினர் பாரம்பரிய தொழிலையும், சடங்கு நடைமுறைகளையும் செய்து வருகின்றனர்.

சொத்துரிமையும் உறைவிடமும் தந்தைவழியாகஉள்ளமையால் இச்சமூக அமைப்பு தந்தைவழி (Patriarchal) சமூகக்கட்டமைப்பைக்கொண்டது. ஆனால், மட்டக்களப்புத் தமிழரிடம் குடிமுறையும்,

சொத்துரிமையும்,உறைவிடமும் ஒருங்கிணைந்த தாய்வழிச் (Matriarchal) சமூக அமைப்பாகும். எனினும், தமிழர் மத்தியில் உள்ள கொம்புமுறி விளையாட்டுச் சடங்கில் சேரிப்பிரிப்பு[1] தந்தைவழியாகவே (Patriarchal) உள்ளது.

***பாரம்பரியதொழில்முறைகளில் தொட்டுணராப் பண்பாட்டுப் புரிதல்கள்***

வனக்குறவர்கள் பாம்பாட்டுதல், வேட்டையாடுதல், வீதியோர வியாபாரம் செய்தல், யாசகம் செய்தல் ஆகிய தொழில்களைச் செய்தாலும்,பிற்காலத்தில் சேனைப் பயிர்ச்செய்கை, மந்தை வளர்ப்பு, மீன்பிடி, கூலி,அரச உத்தியோகம் முதலானதொழில்களிலும் ஈடுபடுகின்றனர்.இவர்களுக்கு கல்லோயா நீர்ப்பாசன அபிவிருத்தித் திட்டத்தினால் ஏற்பட்ட தொழில் குறைப்பு, நுண்கடன் திட்டம், புதிய சட்டதிட்டங்கள் (வனப் பாதுகாப்பு), யுத்தம்,முன்னேற்றம், வளர்ச்சி எனும் மூலோபாயங்கள், பெரும்பான்மை மத அடிப்படைவாத நடவடிக்கைகள் பாரம்பரியத் தொழில் முறைகளுடனும் பண்பாட்டு மரபுரிமைகளுடனும்வாழ்வதற்குச் சவாலாக அமைகின்றன. அடிக்கட்டுமானஉற்பத்தியில் அதிர்வு ஏற்பட்டதும் மேற்கட்டுமான பண்பாட்டு வாழ்வியலிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

இவர்கள் உள்ளூர் அறிவுத்திறன், ஆளுமை வெளிப்பாட்டைத் தமது வாழ்வியலிலும்,தொழிலிலும் வலுப்பெற்றவர்களாக வாழ்கின்றமை அவர்களது மதிநுட்பத்தைக் காட்டுகின்றது. பாம்பாட்டும் தொழிலுக்காகமதிநுட்பத்தைப் பயன்படுத்தி பாம்புகளைப் பிடித்து பழக்கி, பாம்பிற்கான உணவு கொடுத்து, பாம்பாட்டும்முழுப் பயிற்சிகளையும், நுட்பங்களையும் வலுப்படுத்தி பாம்பாட்டும்போது அதற்கான மருந்துப் பொருட்கள் தயாரிக்கும் அறிவையும்திறனையும் தொட்டுணராப் பண்பாட்டு மரபாகக் காட்டலாம். வனக்குறவர்களிடம் பாம்பைப் பிடித்து பழக்கிப் பயிற்சி கொடுப்பதனூடாக வரும் செயற்பாட்டில்மனத்தகுதி, புத்திசாலித்தனம், துணிச்சல் என்பன நிறைந்துள்ளன.

இத்தொழிலினூடாக, இவர்கள் மருத்து தரும் வேர்கள், காய்கறிகள், செடிகள், கொடிகளை அறியும் திறனுள்ளவர்கள். காட்டு மூலிகைகள் ஊடாக பரிசாரி மருத்துவம் செய்வதும் வயது முதிந்தவர்கள் பிரசவம் பார்ப்பதும் வெட்டுக்காயம், சொறி, இருமல், வயிற்றுவலி, விசம் ஆகியவற்றில் இருந்து விடுபட மருத்துவ முறைகளைக் கையாள்வதும் குறிப்பிடத்தக்கது. இவை எழுத்திலோ பதிவிலோ இல்லை.இவ்வறிவு சிந்தனையிலும் ஞாபகங்களிலும் வைத்து வாழ்வியலில் திரும்பத்திரும்ப நடைமுறைப்படுத்துவதனூடாகப் புத்துயிர் பெறுகின்றது. எனினும் இதில்,இளம் சமூகம் ஈடுபடுவது குறைவு. பிற மதக்கொள்கையினாலும்,பாடசாலைக் கல்விமுறையின் கட்டமைப்பினாலும், பல்தேசிய உற்பத்திப் பொருட்களின் குவிப்பினாலும், நவீன அறிவின் அதிகாரத்தினாலும் ஏற்பட்டுள்ளது.

வனத்தில் வேட்டையாடும்போது இடையூறுகள்,ஆபத்துக்கள் வராது பாதுகாக்க இயற்கையை வழிபடும் மரபு உள்ளது. வேட்டை இலகுவில் கிடைக்கவும் விசப் பூச்சிகளில் இருந்து பாதுகாக்கவும் மருத்துவத்திற்குரிய காவிளாச்செடிக்குச் சடங்கு செய்யப்படுகின்றது (நேர்காணல்:சி.ஆனந்தன்).வனக்குறவர்கள் தாவரங்கள், உயிரினங்கள்மீதும் ஆழ்ந்த அன்பும், பற்றும் வைத்துள்ளவர்கள்.ஆனால், சமகால மனிதர்கள் சூழலுக்கு விரோதமாக அபிவிருத்தி என்ற போர்வையில் நஞ்சைவிசிறி செடிகளை அழிக்கும் மனப்பாங்கில் வாழ்கின்றனர். உயிரினங்களை நேசிக்கும் நற்பண்புகள் பூர்வீகக் குடிகளிடம் வெளிப்படுகின்றது. இதுபற்றி வினவும்பொழுது,‘‘காவிளாச்செடி காயத்தை ஆற்றுவதற்கான மூலிகை’’ (நேர்காணல்:சி.கந்தசாமி) எனப்படுகின்றது. தொட்டுணராப் பண்பாட்டு என்பது இதனுள் இருக்கும் அறிவு நுட்பங்கள், கொண்டாட்டங்கள், மகிழ்ச்சி, துன்பம், செயற்திறன், மனத்தகுதியம், கூட்டுணர்வு என்பவையே ஆகும்.

[1] கண்ணகி அம்மனை வணங்கி மழைவேண்டிச் செய்யப்படும் சடங்கில் வடசேரி, தென்சேரி என இரண்டாகப் பிரிந்துபோட்டிரீதியாக விளையாடுவது இதில், இச்சேரிப்பிரிப்பு தந்தை எந்தச் சேரியோ பிள்ளைகளும் அந்தச் சேரியுடன் சேர்ந்து கொம்புமுறி விளையாட்டில் ஈடுபடுவர். இப்பிரிப்பு அவ்விளையாட்டு நடைபெறும் குறித்த காலத்திலேயே நடைமுறையில் இருக்கும்.

***சடங்குசார் ஆற்றுகையில் தொட்டுணராப் பண்பாட்டு***

சடங்குசார் ஆற்றுகையில் வழிபாட்டுமரபுகளைப் பரம்பரையாக, உள் உணர்வு ரீதியாகப் பின்பற்றி சடங்கில் பிரதானம்பெறும் மாந்திரீக ஆற்றலுடனும் சுற்றுச்சூழலுடனும் நட்புக்கொண்டுவாழ்வதனால் சுற்றுச்சூழலில் ஏற்படும் ஆபத்துக்களில் இருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ளப் பொறிமுறைகளை வகுத்து செயற்படும் நிபுணத்துவம் குறிப்பிடத்தக்கது. மாந்திரீக அறிவைப் பயன்படுத்தி அதன் நம்பிக்கையுடன் வாழ்ந்து வழிபட்டாலும் இந்து மதம், கிறிஸ்தவ மதம், பௌத்த மதம் ஆகியவற்றின் தாக்கம் மத மாற்றத்திற்கு வழி ஏற்படுத்தியது. இதனால்,சடங்குரீதியான வாழ்வியலைச் சீராக்குவதற்கான மாந்திரீக அறிவும்,மனதை ஒரு நிலைப்படுத்தலும் மாறியது.சடங்கில் ஈடுபட்டு மகிழ்ந்து ஆரவாரப்படும்போது ஆடல், பாடல்களுக்கூடாகத் தொடர்புகொண்டு உறவுகளை வலுப்படுத்தி,உளத்திருப்தி அடைவதனால் இச்சடங்கு மீளச்செய்யப்பட்டு பயில்வில் உள்ளது. எழுத்துப் பனுவலற்ற இச்செயற்றிறன் ஞாபகங்களை மீளச்செய்தலினூடாகவே வலுப்பெறும்.

வனக்குறவரின் குல தெய்வமான வள்ளியம்மன்வழிபாட்டில் ஆண்கள் ஆற்றங்கரைக்குச்சென்று துடக்குக் கழிக்க நீராடுவர். பின்னர் குறித்த இடத்தில் கொத்துப் பந்தல் அமைத்து முருகன், வள்ளியம்மன், தெய்வானை, பிள்ளையார் ஆகிய தெய்வங்களுக்குப் பூக்கள் அணிவித்து, பலிகொடுத்து பொங்கி மடை வைத்து பந்தலில் சடங்கு நடக்கும். இதன்போதுகலை (உரு) வந்து ஆடும் நிகழ்வு முக்கியமானது. உரு வரும்போது அவரிடம் சுற்றியிருக்கும் மக்கள் வாக்குக்கேட்பதும் உரு நிலையில் தன்னிலை மறந்து கட்டுச்சொல்வதும் எதிர்காலத்தைத் திட்டமிடலும்அதனூடாக வளம் வேண்டுதலும் பிரதானமானது. உருவேறிஆடுவோர் காலில் சதங்கை அணிந்து இடுப்பில் திரித்த கயிறுகட்டி இலை, குழைகளைக் கட்டி டுப்பிடிவாத்திய ஒலி எழுப்பிசத்தம், கூச்சல் போட்டு ஊரை அழைத்து ஆடுவர். சிலர் மிருகங்களாகவும் வேடமிடுவர். சடங்கில் அம்பு, வில்,ஈட்டி கொண்டு வேட்டை ஆடும்முறை பிறருக்குச் செய்துகாட்டப்படும். இது வேட்டையாடும் முறைமைகளையும்,சடங்கு விதிமுறைகளையும் இளம் தலைமுறைக்குக் கையளிப்பதாகவும் அமைவது வெளிப்படும். இதில் வேலனாக 'உரு ஏறியவரே' ஊர்நலனுக்கு வாக்குச்சொல்லி ஆசீர்வதிப்பர். உளத்தில் ஏற்படும் பேருணர்ச்சியால் மயங்கி விழும்போது மந்திரம் சொல்லி தண்ணீர் தெளித்து எழுப்புவர். இது ஊர் முழுவதும் இணைக்கப்படும் தெருவெளிச் சடங்குசார் ஆற்றுகை. ஊர் சுற்றுச்சடங்கில் வள்ளியம்மன் தூக்கிச் செல்லப்பட்டு,வேட்டையாடும் நிகழ்வும் ஆற்றுகை செய்யப்படும். தீய பேய் பிசாசுகள் நீங்க மஞ்சள் நீர் தெளிப்பதும்,இறுதியில் நான்கு தெய்வத்தின் உருவப் பொம்மைகளையும் ஆற்றில் கரைத்து பந்தலுக்கு வந்து ஊர்கூடி கஞ்சி காய்ச்சி பகிர்ந்து உண்பதுடமும் விழாமுடிவடையும். இச்சடங்குசார் ஆற்றுகை நிகழ்வு வருடாவருடம் வனக்குறவர்களால் நடைபெறும். இது அக்கிராம மக்களின் ஒன்றுகூடலில் செய்யப்படும் சடங்குசார் ஆற்றுகையாகும்.

இச்சடங்கின்மறுநாள் குறி சொல்லிப் பிழைக்க உதவும் பிரதான தெய்வமான ஜக்கம்மாவுக்கு சடங்கு செய்வதும் குறிப்பிடத்தக்கது (நேர்காணல்: ம.சின்னம்மா).''காட்டில் கொத்துப்பந்தல் அமைத்து இரண்டு அடி உருவம் செய்து பெண்ணாக சோடித்து குடிபானங்கள் வைத்து இறைச்சி உண்டு ஆடிப்பாடி மகிழ்ந்து செய்யப்படும்''(நேர்காணல்: சி.கந்தசாமி) ஒவ்வொரு வருடமும் நம்பிக்கையின் அடிப்படையில் தமக்கான ஒழுங்குமுறையுடன் மகிழ்ந்து கொண்டாடுவது முக்கிய நடைமுறையாகும். குறி சொல்வதில் தேர்ச்சி பெற்ற இவர்கள் கைரேகை பார்த்து கணித்து முக்காலத்தையும் சொல்லும்பொழுதுஅனைவரும் விரும்பிக்கேட்கும் நிலை வலுவாகியுள்ளது.

சடங்கை,இயற்கையில் இருந்தும் விசப் பூச்சியில் இருந்தும் தம்மைப் பாதுகாக்கவும் தற்காக்கவும் தீயசக்திகளில் இருந்து விடுபடவும், உத்தியாக்களுக்கு[2] ஆறுதல் கிடைக்கவும் செய்யப்படுகிறது. சடங்கினை மீளச்செய்வதனூடாக பண்பாட்டு நுட்பங்களும், அறிவனுபவமும் கையளிக்கப்படும்.

டுப்பிடி வாத்திய இசை உடம்பினுள் வலுவடைந்து உணர்வினைத் தூண்டி மெய் மறந்து ஆடவைக்கும் ஒலியைத் தரவல்லது. டுப்பிடி, மிருகத்தோல் ஒருவகைப் பழத்தாலான பசை, இரும்புக் கம்பி, சணல் போன்றவற்றைச் சேர்த்து நெருப்பில் வாட்டி தயாரிக்கப்படும் (நேர்காணல்: சி.ஆனந்தன்). டுப்பிடியில் இசையை எழுப்ப இரண்டு குச்சி பயன்படுத்தப்படும். இதன்போது குறவர்களின் ஆட்டக்கோலங்களின் அசைவு வெளிப்பாடு, உடம்பைநிகழ்த்தி உள நெருக்கடியைச் செய்து ஆற்றுப்படுத்தத் துணைபுரியும். குறிப்பாக, பெண்கள் உருக்கொண்டு ஆடும்போது அன்றாட வாழ்வில் எதிர்கொள்ளும் ஒடுக்குமுறைகளை தம்முடைய உடல், உணர்வு, ஆட்ட அசைவுகளுடன் கூச்சல், சத்தம் எழுப்பிப் பாட்டுடன்ஊரவரை ஒருங்கிணைத்து,ஈடுபடுத்தி கூட்டுமன உணர்வுடன் நிகழ்த்தப்படும். இவ்வாற்றுகையில் கொண்டாட்டம், கருத்துத்தெரிவிப்பு, உளப்பகிர்வு, மனக்குறைகளை ஒப்புவித்தல், பக்தியுடன் உணர்வை வெளிப்படுத்தல் என்பன வெளிப்படும். இது உருக்கொண்டு ஆடுதலுடன் தொடர்புபட்டதாக அமைகிறது.

இந்நிகழ்வு தமது ஊரவர் ஒருங்கிணையும் நம்பிக்கைக்குரிய இடமாக மாறுவதனால், சுதந்திரமாக சொல்லமுடியாத ஆசைகள், அடக்கப்பட்ட பால்நிலை உணர்வுகளை வெளிப்படுத்தி எதிர்காலத் திட்டமிடலை குலதெய்வத்திடம் ஒப்புவித்து உள ஆறுதலடைவது இடம்பெறும். இவ்வகைப் பேருணர்ச்சி வெளிப்பாட்டு முறை நம்பிக்கையுடன் வாழ்வதற்கான ஊடகமாகும்.இதில் ஈடுபடுவோருக்கு ஆற்றுப்படுத்தலைக் கொடுப்பது தொட்டுணரமுடியாத பண்பாட்டுப் பெறுமானமாகும். சடங்காற்றுகை வெளியும் பண்பாட்டு வெளியும் நம்பிக்கையுடன் உணர்வைப் பகிரவும் செயற்படுத்தவும் முன்னிலை வகிப்பது இதனூடாகப் புலப்படுகின்றது

***முடிவுரை***

சமகாலத்தில் உலகமயமாக்கலின் தாக்கம், பெரும்பான்மை இன ஆக்கிரமிப்பு, அபிவிருத்தி, நாகரிகப்படுத்தல் எனும் காலனிய ஆதிக்கம், சமஸ்கிருதமயமாக்கலின் மேனிலையாக்கம் எனும் மாயை, கிறிஸ்தவமதஇடையூறுகள் என்பன வனக்குறவர்களின் சடங்குமுறை, தொழில் வெளிப்பாட்டு வாழ்வியலில் பாதிப்புக்கள் ஏற்பட்டாலும்,நம்பிக்கையின் அடிப்படையில் அதில் ஈடுபட்டுகொண்டாடுவது கவனத்திற்குரியது. இதில்டுப்பிடி எனும் வாத்தியமைய ஆற்றுகை பயிலப்படுகின்றது. அத்தோடு, இவர்களின் மொழி வழக்கு, மருத்துவப் பிரயோகம் என்பன இடம்பெறும் வெளியாகவும் உள்ளூர் அறிவும் நிபுணத்துவமும் மேனிலையடையும் சந்தர்ப்பமாகவும் விளங்குகின்றது. பெரும்பான்மை இனத்தவர்களால் குறவர்கள், காட்டுவாசிகள் என்று இழிவாகக்கூறி அவர்களது வாழ்க்கையை நாகரிகமற்றது, பின்தங்கியது எனக் கீழ்நிலைப்படுத்திப் பண்பாட்டுத்தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்தி கைவிடும் நிலையும் நிலவுகின்றது.

இவர்கள் வாழ்க்கையில் பண்பாட்டுக் கலப்பும்,இரட்டைத் தன்மையும் ஏற்பட்டுள்ளன. வனக்குறவர்களின் சடங்குசார் ஆற்றுகைமூலம் மக்கள் கூடிக்கொண்டாடி உள ஆற்றுப்படுத்தலைச் செய்வதோடு,இவ்வாற்றுகையானது உள்ளூர் அறிவு, திறன், ஆற்றல் வெளிப்பாட்டை வலுப்படுத்தவும், தமது அடையாளத்தையும், மரபுரிமைகளையும் இளம் தலைமுறைக்குக் கையளிக்கவும் வழிவகுக்கின்றது.

தொழில் முறைகளில் பாம்பைப் பிடித்து அதனை தமக்குரியதாகப் பயிற்றுவித்து உருவாக்கும் அறிவாற்றலும் நுட்பமுறையும் ஏனைய தொழில் வகுப்பினால் அழிக்கப்படும் போக்கும் நிலவுகின்றது. இதனால் அவர்களின் பண்பாட்டு மரபுரிமம் அறிவின் மதிநுட்பம் விடுபடும் நிலையும் கவனத்திற்குரியது. இதனால், அவர்களது

[2]இறந்தவர்களை வனக்குறவர்கள், வேடர்கள், தமிழர்கள் ஆகியோர் உத்தியாக்கள் என்று அழைப்பதும் அவர்களுக்குச் சடங்கு செய்வதும் சடங்கின்போது அவர்களை அழைத்து உரு ஏறி ஆடுவதும் வழமை.

ஆதரவு, யோசனை என்பவற்றுடன் அந்தச் சமூகவெளியில் நின்று அவர்களின் விருப்புடன் அவர்களது பாரம்பரிய மரபுரிமங்களை வலுப்படுத்துவது அவசியம்.

***உசாத்துணை நூல்கள்***

[1] குகபாலன்.க.,இலங்கையின் பழங்குடிகள், பரணன் புத்தக நிலையம், கொழும்பு, 2000.
[2] சலீம் ஏ.ஆர்.எம், அக்கரைப்பற்று வரலாறு,நூரி புத்தக இல்லம், அக்கரைப்பற்று, 1990.
[3] பக்தவத்சல பாரதி, பண்பாட்டு உரையாடல்கள் - முன்மொழிவுகள், விவாதங்கள், புரிதல்கள், அடையாளம், திருச்சி மாவட்டம், 2017.
[4] கரசூர் பத்மபாரதி, நரிக்குறவர் இனவரையியல், தமிழினி, மணி ஆப்செட் சென்னை, 2004.

***நேர்கண்டோர் விபரம்***

[1] ஆனந்தன்.சி., வயது 57, பாம்பாட்டுதல்,ஸ்ரீவள்ளிபுரம்,காஞ்சிரங்குடா,09.07.2020.
[2] கந்தசாமி.சி., வயது 64, பூசாரி, ஸ்ரீவள்ளிபுரம், காஞ்சிரங்குடா, 09.07.2020.
[3] சின்னம்மா.மா., வயது 45,சாத்திரம் சொல்லுதல்,ஸ்ரீவள்ளிபுரம், காஞ்சிரங்குடா, 07.10.2020.
[4] மீனாட்சி.ர., வயது 50, சாத்திரம் சொல்லுதல், ஸ்ரீவள்ளிபுரம், காஞ்சிரங்குடா, 07.10.2020.